வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 27.08.2025 புதன்கிழமை இதழ் : 239 பக்கங்கள் : 12




# ரணில் பிணையில் விடுவிக்கப்பட்டார்

- பிணை வழங்க சட்டமா அதிபர் எதிர்ப்பு
- நீதிமன்றம் அருகே கூடியவர்களால் பதற்றம்



கொழும்பு, ஓகஸ்ட் 27

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிணையில் செல்வதற்கு கொழும்பு - கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை அனுமதியளித்தது.**

அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வு துறையினரால் கைது செய்யப்பட்டார். கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவரை செவ்வாய்க்கிழமை (நேற்று) வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப் பட்டது.

இதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க சிறையில் திடீரென நோய்வாய்ப்பட் டார். சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் தற்போது; தேசிய மருத்துவமனையில்



சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நிலையில், அவர் தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு

11






## படகை அலை தாக்கியதில் மீனவர் பலி!

வடமராட்சி, ஓக. 27

படகை கடல் அலை தாக்கியதில் இளம் மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

வடமராட்சி கிழக்கு - சுண்டிக்குளம் கடற்பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புத்தளம் - உடப்பைச் சேர்ந்த சின்னத்தம்பி சசிதரன் (வயது 25) என்பவரே உயிரிழந்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

அண்மை நாட்களாக சுண்டிக்குளம் கடல்பரப்பில் அசாதாரண கால நிலையுடன் பலத்த காற்றும் வீசி வருகிறது. நேற்றைய தினம் மீனவர்கள் கரைவலை மீன்பிடி யில் ஈடுபட்டிருந்தனர்.

உயிரிழந்த மீனவர் படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்தார். அப்போது கடல் அலை ஒன்றின் தாக்கத்திலிருந்து படகை விடுவிக்க முயன்றுள்ளார். ஆனால், அலை தாக்கியதில் படகிலிருந்த இளை ஞர் அதில் சிக்கிக் கொண்டார். இதில், அவர் அந்த இடத்திலேயே

11

## நாட்டின் இரண்டாவது பெரிய புதைகுழியாக சித்துப்பாத்தி

### நேற்று 16 எலும்புக்கூடுகள் கண்டறிவு

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 27

அரியாலை மனிதப் புதைகுழியில் நேற்றைய தினம் 16 எலும்புக்கூடுகள் புதிதாக கண்டறியப்பட்டன. இதன்மூலம் நாட்டில் கண்டறியப்பட்டவற்றில் இரண்டாவது பெரிய புதைகுழியாக அரியாலை - சித்துப்பாத்தி மாறியுள்ளது.

சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்டமாக மூன்றா வது பகுதியாக மேற்கொள்ளப்படும் அகழ்வு நேற்று இரண்டாவது நாளாக தொடர்ந்தது.

மனிதப் புதைகுழியை விரிவாக்கும்



செயல்பாடு நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் அந்த இடத்தில் 16 எலும்புக்கூடுகள் வெளிப்பட்டன. இவற்றில் சிறுவர்களின் எலும்புக்கூடுகளும்

11

## முத்துஐயன்கட்டு இளைஞர் மரணம்; இராணுவ சிப்பாய்களுக்கு பிணை!

### வழக்கை கையாண்ட விதத்தில் சுமந்திரன்மீது கடும் விமர்சனம்

முல்லைத்தீவு, ஓக. 27

முத்துஐயன்கட்டில் இராணுவத்தினரின் தாக்குதலில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்த வழக்கில் சந்தேகநபர்களான 4 சிப்பாய்களையும் பிணையில் செல்ல முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது.

இந்த நிலையில், இந்த வழக்கில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தொடர்பில் பலத்த விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருபவை வருமாறு,

கடந்த 07ஆம் திகதி, முத்துஐயன்கட்டு இராணுவ முகாமினுள் சென்று பின்னர் சடலமாக மீட்கப்பட்ட குடும்பஸ்தரின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நடைபெற்று வந்தது.

11

## சுயாதீன நீதித் துறையால் சட்டவாட்சி உறுதியாகியுள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஓக. 27

அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச வேண்டாம் - அழுத்தங்களால் பின்னோக்கிச் செல்ல வேண்டாம் என்று நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கிறோம். சட்டத்தின் ஆட்சி சுயாதீன நீதித்துறையால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

11

### காணாமலாக்கப்பட்டோர், படுகொலையானோர்

## மண்டைதீவில் நேற்று நினைவேந்தப்பட்டனர்



- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 27

மண்டைதீவில் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட - படுகொலை செய்யப்பட்டவர்களின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று செவ்வாய்க்கிழமை உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

கடந்த, 1990.08.26ஆம் நாளன்று தீவக பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் போராட்டக்காரர்கள் பொலிஸார் நேற்று முரண்பாடு!

மன்னார், ஓக. 27

மன்னார் மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெற்றபோது மனு வழங்குவதற்காக காற்றாலை மின்சார திட்டத்துக்கு எதிராக போராடுபவர்கள் அங்கு சென்றதால் பொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையே நேற்று முரண்பாடு ஏற்பட்டது.

காற்றாலை மின்சார திட்டத்துக்கு எதிராக நேற்று 24ஆவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் அருட்தந்தை சக்திவேல் உள்ளடங்கலாக தென்பகுதியில் இருந்து மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் மற்றும் அருட்சகோதரிகள் பலர் இணைந்திருந்தனர்.

இந்த நிலையில், போராட்டக்காரர்கள் மாவட்ட அரச அதிபருக்கும் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பங்கேற்ற அரச தரப்பினருக்கும் மனு ஒன்றை வழங்குவதற்காக நேற்றைய



தினம் அங்கு சென்றிருந்தனர்.

இதன்போது, மாவட்ட செயலகத்தின் பாதுகாப்பு பணியிலிருந்த பொலிஸார் அவர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. இதைத் தொடர்ந்தே போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

எனினும், சம்பவ இடத்துக்கு வருகைதந்த மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அமைதியான முறையில் செயலகத்துக்கு செல்வதற்கு அனுமதியளித்தார்.

நீண்ட இழுபறிக்கு பின்னர் போராட்டக்காரர்கள் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர், அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து தமது மனுவை கையளித்தனர். (ஐ)

# எங்களின் போராட்டத்துக்கு சகலரும் ஆதரவு தாருங்கள்

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் முல்லைத்தீவு சங்கத்தினர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 27

எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நடத்தப்படும் பேரணிகளுக்கு சகல தரப்பினரும் ஆதரவு தர வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் மக்கள் சர்வதேச நீதியையே கோருகிறார்கள். ஒரு போதும் உள்ளூர் பொறிமுறையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை சர்வதேச நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வடக்கில் யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் இருந்து செம்மணி வரையும் கிழக்கில் மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து காந்தி பூங்கா வரையும் பேரணிகளை நடத்தவுள்ளனர்.

இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு கோரி முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவர் சுப்பிரமணியம் பரமானந்தம் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார். (ஐ)

# சுமந்திரனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

## தமிழில் ஆட்சேபனையை தாக்கல் செய்யுமாறு பதில் மனுவில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 27

வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினரை கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கியமை தொடர்பில் சுமந்திரனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 7ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுமந்திரன் தாக்கல் செய்த ஆட்சேபனை மனுவில் ஒரு பகுதி ஆங்கிலத்திலும் ஒரு பகுதி தமிழிலிலும் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நீதி நிர்வாக மொழி தமிழ். ஆகையால், முழுமையாக தமிழிலேயே ஆட்சேபனை தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும் மனுதாரரின் பதில் ஆட்சேபத்தில் கூறப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர் தெரிவுகளின்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அறிவுறுத்தலுக்கு மாறாக செயல்பட்டார் என்று கூறி வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பொன்னம்பலம் இராசேந்திரம் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து சுமந்திரனால் கடிதம் ஒன்றின் மூலம் இடைநிறுத்தப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து குறித்த பிரதேச சபை உறுப்பினர், சுமந்திரன் தன்னை எந்த அடிப்படை முகாந்திரமும் இல்லாமல், மத்திய குழுவின் தீர்மானம் எதுவுமின்றி கட்சியில் இருந்து தன்னிச்சையாக நீக்கினார் என்று கூறி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

கடந்த தவணை குறித்த வழக்கில் தோன்றிய தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர், பதில் பொதுச் செயலாளர் குறித்த வழக்கு தாக்கல் செய்ததே தவறு என தமது ஆட்சேபனையை எழுத்துமூலம் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த ஆட்சேபனைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை தமது பதில் ஆட்சேபனையை பிரதேச சபை உறுப்பினர் தாக்கல் செய்திருந்தார்.

அதில், குறித்த கட்சியின் பதில் தலைவர், பதில் பொதுச் செயலாளரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனையானது ஒரு பகுதி ஆங்கிலத்திலும் அதன் மறுபகுதி தமிழிலும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டமை சட்டத்துக்கு புறம்பானது.

யாழ்ப்பாணத்தில் நீதி நிர்வாக மொழி தமிழ். ஆகையால், முழுமையாக தமிழிலேயே ஆட்சேபனை தாக்கல் செய்யப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், இந்த வழக்கை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ)

# இரத்தவாந்தி எடுத்து குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 27

இரத்த வாந்தி எடுத்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அராலி மத்தி, வட்டுக்கோட்டையை சேர்ந்த தெ. கோபாலசாமி (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், கடந்த 24ஆம் திகதி கிளிநொச்சியில் உறவினரின் வீட்டுக்கு சென்றிருந்தார். நேற்று அதிகாலை 3 மணியளவில் அவர் இரத்த வாந்தி எடுத்துள்ளார். இதையடுத்து, அவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

# வைத்தீஸ்வர கல்லூரியில் 27ஆவது புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஓக. 27

தேசிய கலை இலக்கிய பேரவையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 27ஆவது நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் புத்தக அரங்க விழாவின் தொடக்க நிகழ்வாக 'ஈழத்து நூல்களை அறிவோம்' என்ற தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச்செயலாளரும் மூத்த சட்டத்தரணியுமான சோ. தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்த நிகழ்வில் நூல்களின் அறிமுக உரைகளை பிரபல இளம் அரங்கச் செயல்பாட்டாளர் இராசையா லோகாநந்தனின் 'மலை தாண்டி கடல் தாண்டி' புத்தகம்பற்றி கவிஞர் வி. கே. றொபின், கட்டட வடிவமைப்பாளரும் நூல் ஆய்வாளருமான இ. மயூரநாதனின் 'யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு' நூல் தொடர்பாக வைத்தீஸ்வர கல்லூரி அதிபர் எஸ். யசோதரன், பிரபல எழுத்தாளரும் கவிஞருமான வி. ரி. இளங்கோவனின் 'இளங்கோவன் படைப்புகள்' புத்தகம் தொடர்பாக எழுத்தாளரும் ஆசிரியருமான கலாநிதி சு. குணேஸ்வரன் ஆகியோர் ஆற்றுவர்.

தொடர்ந்து, விசேட கலை நிகழ்வுகளாக கூத்தாட்டு அவைக்களத்தின் தயாரிப்பில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எழுத்துருவில் வி. விஜயரூபனின் நெறியாள்கையில் 'இடுக்கண் வருங்கால்', வி. விஜயரூபனின் எழுத்துரு, நெறியாள்கையில் 'பட்டறிவு' ஆகிய சிறுவர் நாடகங்களும் அரங்கேறவுள்ளன.

இந்த நிகழ்வின் விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# முள்ளிக்குளத்தில் முகாம்களை அகற்றி மக்களை குடியேற்றுக!

## ரவிகரன் எம். பி. கேள்வி



மன்னார், ஓக. 27

மன்னார் - முள்ளிக்குளத்தில் பொதுமக்களின் காணிகள், வீடுகளை ஆக்கிரமித்துள்ள படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டும். அந்தக் கிராம மக்களை மீளக்குடியேற்ற வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவருக்கு பதிலளித்த கடற்படை அதிகாரி, இந்த விடயம் தொடர்பில் ஆலோசனை பெறுவதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் கிடைத்த பின்னர் இது விடயத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று கூறினார்.

இதேசமயம், கடற்படையினரால் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரதியை தம்மிடம் தந்தால் அதுதொடர்பில் தாமும் கவனம் செலுத்துவார் என்று பிரதிஅமைச்சரும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான உபாலி சமரசிங்க கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிவகுமாரனின் 75ஆவது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 27

தமிழ் மக்களின் விடுதலை போரில் முதல் வித்தான தியாகி பொன். சிவகுமாரனின் 75ஆவது பிறந்த தினம் நேற்று கொண்டாடப்பட்டது. அவரின் 75 வது பிறந்த தினமான நேற்று உரும்பிராயிலுள்ள அன்னாரின் சிலைக்கு சிவகுமாரன் நினைவேந்தல் குழுவினர் அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.08.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஆனைக்கும் அடி சறுக்கும்

ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்கத் துணிந்தமையை அரசாங்கத்தின் செயல் திறனாகவும் சட்டத்தின் முன்னால் அனைவரும் சமன் என்பதாகவும் நோக்கப்படுகிறது.

ரணிலின்மீதே கை வைத்திருக்கிறார்கள் என்றால் அனைவர் மீதும் சட்டரீதியில் நகர்வார்கள் என்னும் பார்வையையும் வழங்கியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்கவின் கைதின் மூலம் ஏதோவொரு வகையில் சிதறிக்கிடந்த எதிரணியினர் ஒன்றுபட்டிருக்கின்றனர். அவர்கள் இனி பெருமளவுக்கு அரசாங்கத்தை எதிர்க்கும் விடயத்தில் ஒன்றுபட்டுச் செயல்படவே அதிக வாய்ப்பு உண்டு.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போதைய சூழலில் பலமான ஓர் அரசாங்கம். அவர்கள் நினைக்கும் விடயங்களை செய்வதற்கான பாராளுமன்ற பலம் அவர்களிடம் உண்டு. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அவர்களைத் தடுக்கும் நிலையில் எதிரணிகள் இல்லை. ஆனால், இவை நிரந்தரமல்ல. தென்னிலங்கை அரசியலில் எப்போதும் எது வேண்டுமானாலும் நிகழலாம்.

யுத்தத்துக்குப் பின்னரான அரசியலில் முதலில் மகிந்த ராஜபக்ஷ கோலோச்சினார். மகிந்த ராஜபக்ஷவிடமும் ஒரு கணிப்பிருந்தது. இருபது தொடக்கம் இருபத்தைந்து ஆண்டுகளுக்குத் தங்களை எவராலும் அசைக்க முடியாதென்றுதான் அவர்கள் எண்ணினர். ஆனால், நிலைமைகள் மாறின. புதிய பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் பழைய வெற்றிக் கதைகளையே தொடர்ந்தும் நம்பிக் கொண்டிருந்த மகிந்த தோல்வியை சந்தித்தார்.

அதனைத் தொடர்ந்து ரணில் - மைத்திரி கூட்டணியின் கீழ் அனைத்து எதிர்தரப்புகள், சிவில் சமூக அமைப்புகள் என ஒரு பெரும் அணியானதன் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றியை தொடர்ந்தும் தக்கவைக்க முடியாமல் தோல்வியடைந்தனர். ரணிலின் கெட்டித்தனம் ஆட்சியைத் தக்கவைக்கப் பயன்படவில்லை.

மீண்டும், கோட்டாபய தனிச்சிங்கள வாக்குகளில் வெற்றிபெற்றுத் தன்னையொரு சிங்கள - பௌத்த தலைவனாக பிரகடனம் செய்தார். ஆனால், பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து ஏற்பட்ட சவாலை சமாளிக்க முடியாதபோது அவரை ஆதரித்தவர்களாலேயே வெறுக்கப்பட்டார் - வெளியேற்றப்பட்டார். அதனைத் தொடர்ந்து நாட்டைப் பொறுப்பேற்பதற்கு யாரும் இல்லையென்னும் நிலையில் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவால் தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை. நாட்டை மீண்டும் நிமிர்த்தியதில் ரணிலுக்கே பிரதான பங்கிருந்தது. ஆனால், அவரால் சாதாரண சிங்கள மக்களின் நம்பிக்கையை பெற முடியவில்லை. அந்த வகையில் ரணிலின் அரசியல் வாழ்வில் அவர் ஒரு துரதிர்ஷ்டசாலியாகவே இருந்தார்.

இவ்வாறான பல நிகழ்வுகளின் விளைவாக இவர்களிடம் நாட்டை கொடுத்துப் பார்ப்போம் என்னும் அடிப்படையில் மக்கள் அநுரவின் பக்கமாகத் திரும்பினர். இப்போது பந்து ஜே. வி. பியின் பக்கமாக இருக்கிறது. அவர்கள் என்ன செய்யப் போகின்றனர் என்பதைப் பொறுத்தே இலங்கையின் அடுத்த கட்ட அரசியல் அமையும். ஆனால், அவர்களின் அதிகாரத்துக்கும் முடிவு உண்டு. அது அவர்களுக்கும் தெரியாத ஒன்றல்ல.

# வவுனியா ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன



வவுனியா, ஒக. 27

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காணி வழங்கல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் நேற்று ஆராயப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான நா. வேதநாயகன், பிரதி அமைச்சரும் ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான உபாலி சமரசிங்க ஆகியோரின் தலைமையில் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, காணி வழங்கல், ஆசிரியர்களின் பிரச்னை, போக்குவரத்து ஒழுங்குபடுத்தல், விவசாயம் உள்ளிட்ட மாவட்டத்தின் முக்கிய பிரச்னைகள் முன்வைக்கப்பட்டு அவை தொடர்பில் ஆராயப்பட்டன.

அத்துடன், கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களின் முன்னேற்றங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

தொடர்ந்து, பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் ஆராயப்பட வேண்டிய விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. தொடர்ந்து, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்கான திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ப. சத்தியலிங்கம், க. செல்வம் அடைக்கலநாதன், றிசாட் பதியுதீன், ம. ஜெகதீஸ்வரன், கே.காதர் மஸ்தான், து. ரவிகரன், ஐ. முத்து முகமது ஆகியோரும், முதல்வர், பிரதி முதல்வர், தவிசாளர்கள், வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலக நிர்வாக அலுவலர்கள், பொலிஸார் பங்கேற்றனர்.

(ஐ-10)

## கஞ்சாவுடன் இருவர் கைது

கண்டி, ஒக. 27

மோட்டார் சைக்கிளில் கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்தவர் உட்பட இருவர் நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கண்டி - கினிகத்தேனையில் நேற்று முன்தினம் இந்தக் கைது நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

மோட்டார் சைக்களில் மறைத்து கஞ்சாவை கொண்டு சென்று விற்பனை செய்தவரே இவ்வாறு கைதானார். கைதானவர் கண்டி - தெஹியம்வல பிரதேசத்தை சேர்ந்த 40 வயது நபராவார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அம்பகமுவ பிரதேசத்தில் மற்றொரு நபரை நுவரெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து 240 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சட்டவிரோத கும்பலால் பசு மாடு கொல்லப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக. 27

குடும்பம் ஒன்றின் வாழ்வாதாரமாக இருந்த பசு மாடு ஒன்று சட்டவிரோத செயலில் ஈடுபடுபவர்களால் கொல்லப்பட்டது.

காரைநகரைச் சேர்ந்த யோகநாதன் என்பவருக்கு சொந்தமான சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பசு மாடே இவ்வாறு கொல்லப்பட்டது.

இது தொடர்பில் மாட்டின் உரிமையாளர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாடுகளை களவாடி வேட்டையாடும் சட்டவிரோத கும்பலாலேயே இந்த பசு மாடு கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

தீவக பகுதிகளில் வாழ்வாதாரத்துக்கு வளர்க்கப்படும் கால்நடைகள் களவாடப்பட்டு இறைச்சியாக்கி விற்பனை செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக அதிகளவில் இடம்பெற்று வருவதும் தெரிந்ததே.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமை கிடைக்கும்.

**கடகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவி அன்யோன்யம் பிறக்கும். புதிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சக ஊழியர்களைப் அதிகரிக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். ஈகோ பிரச்சினை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்சினைகள் வரக்கூடும். பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி. உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

# பெண் நோயியல் மருத்துவமனையை இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்க

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக. 27

நெதர்லாந்து அரசின் நிதி உதவியில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண பெண் நோயியல் மருத்துவமனையை படிப்படியாக எவ்வளவு விரைவாக இயக்க முடியுமோ அவ்வளவு விரைவாக இயக்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும், இதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

மருத்துவமனையின் செயல்பாடுகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், மேற்படி மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டு இன்னமும் செயல்படாத நிலையில் அங்குள்ள உபகரணங்கள் வேறு மாகாணங்களுக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக வதந்திகள் பரப்பட்டுள்ளன. அவ்வாறான எந்தவொரு நகர்வும் முன்னெடுக்கப்படாத நிலையில் இவ்வாறான கதைகள் பரப்பப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

நெதர்லாந்து அரசின் நிதி உதவியில் வடக்கில் அமைக்கப்பட்ட 4 மருத்துவமனைகளில் மாங்குளம் மருத்துவமனைக்கு மாத்திரம் ஆளணிக்குரிய அனுமதி கிடைக்கப்பெற்றதாகவும் ஏனைய மூன்று மருத்துவமனைகளுக்கும் ஆளணி அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

ஆளணி அனுமதி கிடைக்காத போதும் இருக்கின்ற வளங்களை வைத்துக்கொண்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் திறக்கப்பட்ட மருத்துவ அலகு சிறப்பாக இயங்குவதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார். அந்த மருத்துவ அலகு சிறப்பாக இயங்குவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

அதேபோல கிளிநொச்சி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண பெண் நோயியல் மருத்துவமனையையும் இயக்கத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட ஆளுநர், அங்குள்ள மனிதவளப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினார். (எ-05)

# 2 ஆயிரத்து 510 மாணவர்கள் இணைந்து சோழன் உலக சாதனை படைத்தனர்



கொழும்பு, ஒக. 27

வரலாற்றில் முதல் முறையாக அபாகஸ் மனக் கணித முறையில் 2 ஆயிரத்து 510 மாணவர்கள் இணைந்து 8 நிமிடங்களில் 5 இலட்சத்து 54 ஆயிரத்து 500 கணக்குகளுக்கு விடையெழுதி சோழன் உலக சாதனை படைத்தனர்.

யூசிமாஸ் எனப்படும் அபாகஸ் பயிற்சி நிறுவனம் இந்த நிகழ்வை கொழும்பில் அமைந்துள்ள அலரி மாளிகையில் கடந்த 23 ஆம் திகதி நடத்தியது.

இதில் இலங்கையின் எல்லா மாவட்டங்களைச் சேர்ந்த தீவிர பயிற்சி பெற்ற மாணவர்கள் 2 ஆயிரத்து 510 பேர் பங்குபற்றினர்.

சோழன் உலக சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்ட மாணவர்கள் 2, 3, 4 எண்கள் கொண்ட கூட்டல், பெருக்கல், கழித்தல் மற்றும் வகுத்தல் கணக்குகளுக்கு விடையளித்தனர். இந்தக் கணக்குகள் 2 முதல் 10 அடுக்குகள் வரை வரிசைப்படுத்தப்பட்டிருந்தன.

சோழன் உலக சாதனை படைக்கும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் நினைவுக் கேடயங்கள் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் பன்னாட்டு ஒருங்கிணைப்பாளர் ரொபோ விஞ்ஞானி கார்த்திகேயன், இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் சிறீநாகவாணி ராஜா மற்றும் நிறுவனத்தின் உறுப்பினர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ)

# "பெரிய புராணம்" பற்றி சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக. 27

ஊர்காவற்றுறை நாராந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி சிறீ மனோன்மணி அம்பாள் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு "பெரிய புராணம்" என்னும் விடப்பொருளில் தொடர் சொற்பொழிவு நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 06 ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் மாலை 06. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. அந்த வகையில் சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் ஆற்றவுள்ளார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# சிவகுரு ஆதீனத்தில் வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 27

நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் சிறுவர்கள் மற்றும் இளையோருக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மீளவும் வகுப்புகள் ஆரம்பிக்கவுள்ளன. அந்த வகையில்,

சிறுவர் வகுப்பு (வயது 06 - 15) காலை 09.00 - 11. 00, இளையோர் சந்திப்பு (வயது 16 - 30) மாலை 03.00 - 04. 00 மணிவரை நடைபெறவுள்ளன. (எ)

# 'திக்குவிசயப் படலம்' சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக. 27

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமிகோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 36ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமி நாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார். சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் ச. முகுந்தன் "திக்குவிசயப் படலம்" என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கட்சி ஆட்சியை நிலைநிறுத்த தேசிய மக்கள் சக்தி அரசு முயற்சி!

## சுதந்திரக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 27

**நாட்டில் நடைமுறையிலுள்ள பல கட்சி ஆட்சிமுறைமையை ஒழித்து ஒரு கட்சி ஆட்சியை நிலைநிறுத்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சிக்கிறது. அரசாங்கத்தின் இந்த சர்வாதிகார போக்கைத் தடுப்பதற்காகவே இன்று எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்தமைக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நன்றி கூறுவதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆட்சியைப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைவதற்கு முன்னரே எதிர்க்கட்சிகளை இவ்வாறு ஒன்றிணைத்தமைக்கு அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாம் எதற்காக ஒன்றிணைந்தோம் என்பதை அனைவரும் அறிவர். ரணில் விக்கிரமசிங்க என்பது ஒரு காரணியாகும். ஆனால் இந்த தேசிய மக்கள் சக்தி நாட்டில் தொடர்ந்தும் காணப்படும் பல கட்சி ஆட்சி முறைமையை இல்லா தொழித்து ஒரு கட்சி ஆட்சி முறைமையை ஏற்படுத்த முயற்சிக்கிறது.

இதற்காக அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் என அனைத்தையும் அடக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். தாம் நினைப்பது மாத்திரமே சரி என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. இந்த சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகவே நாம் ஒன்றிணைந்துள்ளோம். நாட்டு மக்கள் ஜனநாயகத்தையே விரும்புகின்றனர். எனவே தான் அரசியல் பேதங்கள் இன்றி ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக எம்மை ஒன்றிணைத்தமைக்கு ஜனாதிபதிக்கு விசேடமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



இன்று நாட்டில் அரசாங்கத்துக்கு எதிராக நிலைப்பாட்டிலேயே சகலரும் காணப்படுகின்றனர்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எதிர்க் கட்சிகளுக்கு அதிகளவில் வாக்களித்து மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். தற்போது நாட்டில் அரசாங்கத்துக்கு எதிரான பொதுமக்களே உள்ளனர். குறிப்பாக தொழிற் சங்கள் இதனை நன்கு அறிந்து கொண்டுள்ளன-என்றார். (அ)

# ஹரினுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 27

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஜனவரி 6 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பதுளை நீதிவான் நுஜித் டி சில்வா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

2024 நவம்பர் 11 அன்று பதுளையில் பொதுத் தேர்தலுக்கான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது பொலிஸாருடன் ஏற்பட்ட கடுமையான வாக்குவாதம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டார். (அ)

# பொரலஸ்கமுவ சூடு துப்பாக்கிதாரி கைது

கொழும்பு, ஓக. 27

பொரலஸ்கமுவ, மாலனி புலத்சிங்கள மாவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நாவின்ன பகுதியில் கைது செய்யப்பட்டதாகக் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட போது, சந்தேகநபர் 20550 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்ததாகக் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் கொழும்பில் உள்ள ஜிந்துப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 25 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 20 வைத்தியசாலைகளுக்கு 20 அம்புலன்ஸ்கள் வழங்கல்!




கொழும்பு, ஓக. 27

இலங்கை மக்களுக்கு தரமான, வினைத்திறனான மற்றும் சிறந்த சுகாதார சேவைகளை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில், 20 அதிநவீன தொழில்நுட்ப வசதிகளை கொண்ட அம்புலன்ஸ்கள் நேற்று முன் தினம் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

சுகாதாரத்துறையின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன், நாட்டில் மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளின் கட்டுப்பாட்டில் உள்ள வைத்தியசாலைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட அம்புலன்ஸ் வாகனம் ஒன்றின் பெறுமதி ரூ. 25.7 மில்லியனுக்கும் அதிகமாகும்.

இந்தப் புதிய அம்புலன்ஸ்கள், நோயாளியை வேறொரு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது பல்வேறு சிகிச்சைகளை வழங்கும் வசதிகள் உள்ளிட்ட பல அதிநவீன வசதிகளைக் கொண்டுள்ளன.

இந்த 20 அதிநவீன அம்புலன்ஸ் வண்டிகள் எம்பிலிப்பிட்டிய, நாவலப்பிட்டிய, மாத்தளை, நீர்கொழும்பு, திருகோணமலை, நுவரெலியா, சிலாபம், மொனராகலை, தம்புள்ளை, ஹொரணை ஆகிய 10 மாவட்ட பொது வைத்திய சாலைகள், பொலனறுவை, மட்டக்களப்பு, பதுளை, அநுராதபுரம் ஆகிய 4 போதனா வைத்தியசாலைகள், பொத்துவில், கந்தளாய், அக்கரைப்பற்று, தெஹியத்தகண்டிய ஆகிய 4 ஆதார வைத்தியசாலைகள், அம்பாறை பொது வைத்தியசாலை மற்றும் சிகிரியா வைத்தியசாலை ஆகிய இடங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

மத்திய அரசு மற்றும் மாகாண சபையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வைத்தியசாலை அமைப்புக்குத் தேவையான அம்புலன்ஸ் வண்டிகள் வரும் காலங்களில் கட்டம் கட்டமாக வழங்கப்படும். இதற்காக மத்திய அரசிடமிருந்தும், சுகாதார மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட விசேட திட்டங்களிடமிருந்தும், வெளிநாடுகளிடமிருந்தும் ஆதரவைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

# யூடியூபர்களின் கருத்து தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 27

தனி ஆட்கள் மற்றும் யூடியூபர்களின் அண்மைய கருத்துகள் மற்றும் கணிப்புகள் நீதித்துறையில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகள் சட்டத்தின் ஆட்சியையும் நீதி அமைப்பு மீதான பொது மக்களின் நம்பிக்கையையும் குறை மதிப்புக்கு உட்படுத்தும் என்று அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

இந்தநிலையில், நீதித்துறையின் சுதந்திரம் வெளிப்புறத் தலையீட்டிலிருந்து பாதுகாக்கப்படவேண்டும் என்று சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அத்தகைய தலையீட்டைச் செய்பவர்கள் அரசியலமைப்பின் கீழ் சட்ட விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

# விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 27

தனமல்வில - வெள்ளவாய வீதியில் கித்துல்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந் துள்ளதாக தன மல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவாய நோக்கிப் பயணித்த கார் ஒன்று எதிர்த் திசை யில் பயணித்த மோட்டார் சைக் கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துநரும் பின்புறத்தில் பயணித்தவரும் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிளின் செலுத்துநர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மானெல்கல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் ஆவர்.இதனையடுத்து காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமை மனு மீதான விசாரணைகள் நிறைவு

கொழும்பு, ஓக. 27

முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகளை இரத்து செய்யும் சட்டமூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை நிறைவு செய்த உயர்நீதிமன்றம், அதன் அரசியலமைப்புச் செல்லுபடித் தன்மை குறித்த தனது இரகசியக் கருத்தை சபாநாயகருக்கு அனுப்பி வைப்பதாக அறிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகளை இரத்துச் செய்யும் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றில் பொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளர் ரேணுக பெரேராவினால் குறித்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யூடியூபர் சுதத்த திலகசிறியின் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டது


கொழும்பு, ஓக. 27

சமூக ஆர்வலரும், யூடியூபருமான சுதத்த திலகசிறிக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டுள்ளது. தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி பொலிஸில் முறையிட்டதை அடுத்து திலகசிறிக்கு முன்னர் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இருப்பினும், அவரது பாதுகாப்புக்கு நம்பகமான அச்சுறுத்தல் இல்லை என்று புலனாய்வு அறிக்கைகள் முடிவு செய்ததைத் தொடர்ந்து அவருக்கான பாதுகாப்பு மீளப் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுவதற்கு முன்னரே, அவர் கைது செய்யப்படுவார் என்று தமது யூடியூப் தளத்தில் கருத்து வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டு, திலகசிறியின் மீது சுமத்தப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு தேசிய வைத்தியசாலை வளாகத்துக்கு பலத்த பாதுகாப்பு!



கொழும்பு, ஒக. 27

கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நேற்றுக் காலை முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும், அவர் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, அன்றைய தினம் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார், மருத்துவ பரிந்துரைகளின் பேரில், மறுநாள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அதன்படி, முன்னாள் ஜனாதிபதி தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ)

# எதிரணியை அச்சமடைய செய்யவே முன்னாள் ஜனாதிபதி ரணில் கைது!

## ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக. 27

**அரசாங்கத்தை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை அச்சமடைய செய்வதற்காகவே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார்.கைது செய்வதற்குரிய நியாயமான காரணிகள் ஏதும் இருக்கவில்லை. இந்த கைதுக்கு அரசாங்கம் நிச்சயம் சட்டத்தின் ஊடாக பதிலளிக்க நேரிடும் என முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு இடமளிக்கவேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்படவேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது.முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மீதான குற்றச்சாட்டுக்கள் முறையாக விசாரிக்கப்படவேண்டும்.

முறையான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படவில்லை.நிறைவேற்றுத் துறையின் ஒரு பகுதியாக செயற்படும் பொலிஸாரின் பிரதான நோக்கம் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்வதாகவே அமைந்தது.

வாக்குமூலம் பெறுவதற்காகவே ரணில் விக்கிரமசிங்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டார். சாட்சியாளர்களுக்கு அச்சமூட்டல் அல்லது சாட்சியங்களை இல்லாதொழித்தல் போன்ற சந்தேகம் காணப்படுமாயின் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்திருக்கலாம்.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் 33 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்துக்கு குறிப்பிட்டுள்ளார்.அவ்வாறாயின் சாட்சியாளர்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவினால் எவ்வித அழுத்தமும் பிரயோகிக்கப்படவில்லை என்பது தெளிவாகுகிறது.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளார். அரசாங்கத்தை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை அச்சமடைய செய்யும் செயற்பாடாகவே இதனை கருதுகிறோம்- என்றார். (அ)

# ரணிலின் கைது விவகாரம் குறித்து மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கம்

கொழும்பு, ஒக. 27

ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்று காலை அஸ்கிரிய மகா விகாரைக்கு விஜயம் செய்து அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்க தேரர் வரக்காகொட சிறி ஞானரத்ன தேரரை சந்தித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர், பிரதம தேரர் மற்றும் சிரேஷ்ட பிக்குகள் அடங்கிய குழுவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பின்போது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய



நிலைமை குறித்தும், நாட்டில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதியின் தற்போதைய உடல்நிலைக்காக அவர்கள் பிரதம தேரரிடம் ஆசீர்வாதமும் பெற்றுக் கொண்டனர்.

# மனைவியைக் கொலை செய்து விட்டு தானும் உயிர்மாய்த்த 75 வயது கணவர்!

கொழும்பு, ஒக. 27

பொல்கசோவிட்ட, கிரிகம் பமுனு பகுதியில் உள்ள வீடொன்றில் 75 வயதுடைய ஆண் ஒருவர் தனது 69 வயதுடைய மனைவியை கொலை செய்த பின்னர், தானும் உயிர் மாய்த்துள்ளார்.

இவர்களது மகள் மற்றும் அவரது கணவர் நேற்று முன் தினம் ஹோமாகம மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு ஒன்றுக்காகச் சென்றிருந்தனர்.

அந்த நேரத்தில், குறித்த நபர் தனது மனைவியைக் கொலை செய்து, பின்னர் தானும் உயிர்மாய்த்துள்ளார்.

மகள் வீடு திரும்பியபோது இந்தச் சம்பவத்தைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் அளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் சில மாதங்களுக்கு முன்பு தனது மனைவியை கொலை செய்ய முயன்றதாகவும், ஆனால் அந்த முயற்சி தோல்வியடைந்ததாகவும் தெரி விக்கப்படுகிறது.

கொலைக்கு முன்பு, இவர் தனது வாழ்வாதாரத்திற்காகப் பயன்படுத்திய புல் வெட்டும் இயந்திரத்தை விற்று பெற்ற பணத்தில் மது அருந்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொலை செய்யப்பட்ட பெண் சுமார் 10 ஆண்டுகளாக பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு கடந்த மூன்று மாதங்களாக படுக்கையில் இருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# டயானாவுக்கு பிணை

கொழும்பு, ஒக. 27

பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நேற்று முன் தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜரானதைத் தொடர்ந்து அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, டயானா கமகே 10 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலை செய்யப்பட்டார்.

செல்லுபடியான விசாக்கள் இன்றி சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருத்தல் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் டயானா கமகேயுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 7 வழக்குகள் தொடர்பான விசாரணைகளுக்காக அவர் நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்துள்ளார்.

இதனால் டயானா கமகேயுக்கு எதிராக நீதிமன்றினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நேற்று முன் தினம் நீதிமன்றில் ஆஜரானதைத் தொடர்ந்து அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# பாவனைக்குதவாத பெருந்தொகையான பேரீச்சம்பழம் மீட்பு

கொழும்பு, ஒக. 27

வத்தளையில் உள்ள களஞ்சியம் ஒன்றிலிருந்து 3,620 கிலோகிராம் காலாவதியான பேரீச்சம்பழம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை மேற்கொண்ட சோதனையின்போது, விற்பனைக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த இந்தப் பேரீச்சம்பழம் கைப்பற்றப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட பேரீச்சம்பழங்களின் மதிப்பு 6.5 மில்லியன் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 619 பேர் கைது!

கொழும்பு, ஒக. 27

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போது குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரிலும், சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பாகவும் மொத்தம் 619 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, 26,216 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 27 நபர்களை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

மேலும் நிலுவையில் உள்ள பிடியாணையுடன் 396 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அறிக்கையின்படி, மொத்தம் 73 மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

மேலும், பல்வேறு போக்குவரத்து குற்றங்களை மீறிய 3,810 நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் மற்றும் சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களைக் கைது செய்ய நாடு முழுவதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷர்களுக்கு எதிராகவும் அரசு மிகவிரைவில் நடவடிக்கை!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஓக. 27

**ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமல்ல, விரைவில் ராஜபக்ஷர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ரணிலின் வெளிநாட்டுப் பயணத்தின்போது அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டமை நிரூபணமாகியுள்ளதன் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சட்டமே ஜனாதிபதிகளுக்கும் உரித்தாகும், அவர்களுக்குப் பிரத்தியேகமான சட்டம் இல்லை. அதன் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக விரைவில் விசாரணை நடத்தப்படும். அலோசியஸிடம் பணம் பெற்றவர்கள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் வழங்கியுள்ள ஆணையில் இது முக்கியமான விடயமாகும். எனவே அதனை விரைவில் நிறைவேற்றுவோம்- என்றார். (அ)

# ஷிரந்தி ராஜபக்ஷ அடுத்த இலக்கு?



கொழும்பு, ஓக. 27

அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட சம்பவம் சர்வதேச ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவரது மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் செய்தியொன்று தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்- 2024ஆம் ஆண்டு யுனெஸ்கோ வெசாக் கொண்டாட்டத்தில் பங்கேற்க பிரான்ஸிற்குச் சென்ற ஷிரந்தி, தனது உறவினர் டெய்சி பொரஸ்டையும் அழைத்துச் சென்றிருந்தார். அந்த விஜத்துக்காக மொத்தம் 2 கோடி 50 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக நால்வருக்கான அறை மற்றும் உணவுக் கட்டணமாக மட்டும் 1 கோடி 61 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளதாகவும், தனிப்பட்ட சுற்றுலா பயணங்களுக்காக அதி சொகுசு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதால், இதற்காக 75 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஷிரந்தி தங்கியிருந்த ஹோட்டல் உலகிலேயே அதிக கட்டணம் வசூலிக்கும் ஹோட்டலாகும். அங்கு தங்குவதனை பிரித்தானிய எலிசபெத் மகாராணி உட்பட பலர் தவிர்த்துவரும் நிலையில், பெரும் தொகை செலவில் அந்த ஹோட்டலில் தங்கியிருந்தமை பெரும் சர்ச்சையாக வெடித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக நல்லாட்சிக் காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்த போதும் இந்த விவகாரம் மூடிமறைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ள சூழலில், ஷிரந்தியின் பிரான்ஸ் விஜயம் மீண்டும் பெரும் பேசுபொருளாக உருவெடுத்துள்ளது.

இதனால் மக்கள் மத்தியில் ஷிரந்தி ராஜபக்ஷ கைது செய்யப்படுவாரா என்ற கேள்வியும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பல்கலை வெட்டுப்புள்ளிகள் வெளியீடு

கொழும்பு, ஓக. 27

2024 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

மாணவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த பாடநெறி மற்றும் பல்கலைக்கழகத்தை பின்வரும் முறைகள் மூலம் சரிபார்க்கலாம்:

பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளம் மூலம்-

இணையத்தளம்: http://www.ugc.ac.lkபல்கலைக்கழக மானிய ஆணையத்தை அழைப்பதன் மூலம்-தொலைபேசி எண்கள்: 0112695301/ 0112695302/ 0112692357/ 0112675854 பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்களா இல்லையா என்பது குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. (அ)

## போராட்டத்தால் வீதிக்கு பூட்டு!

கொழும்பு, ஓக. 27

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கொழும்பில் நேற்று முன்னெடுத்த போராட்டத்தால் கொழும்பு பல்கலைக்கழகம் அருகேயிருந்த வீதி மூடப்பட்டது.

"கல்வியியல் பட்டப்படிப்பின் தகுதிகளை உருவாக்கு", "கல்வியியல் பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கான நடைமுறையை ஒழுங்குபடுத்து!" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தது. (ஐ)


## சுங்கத் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் நாயகம்

கொழும்பு, ஓக. 27

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக சீவலி அருகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, சீவலி அருகொட 45ஆவது சுங்க பணிப்பாளர் நாயகமாக பொறுப்பேற்கிறார்.

சீவலி அருகொட சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளராகவும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மாத்தறையில் துப்பாக்கிச் சூடு எவருக்கும் காயம் ஏற்படவில்லை

கொழும்பு, ஓக. 27

மாத்தறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரையோர வீதி பகுதியில் நேற்று முன்தினம் இரவு உணவகம் ஒன்றின் உரிமையாளர் மீது காரில் பிரவேசித்த ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த துப்பாக்கிச் சூட்டில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் மற்றும் சந்தேக நபர் தொடர்பான தகவல்கள் தொடர்பில் மாத்தறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## சஷீந்திரவின் மறியல் நீடிப்பு!

கொழும்பு, ஓக. 27

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை ஓகஸ்ட் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு, நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

கடந்த 6 ஆம் திகதி நுகேகொடையில் உள்ள அவரது இல்லத்தில் இலஞ்ச ஒழிப்பு ஆணையக அதிகாரிகளால் சஷீந்திர ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

2022 ஆம் ஆண்டு நாடு முழுவதும் நடந்த போராட்டங்களின்போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல-கிரிப்பன்வேவ பகுதியில் உள்ள அரசு நிலத்தில் சேதமடைந்த கட்டடத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டார்.

2022 மே 9 அன்று நடந்த பொதுமக்கள் கிளர்ச்சியின் போது, செவனகல-கிரிப்பன்வேவ பகுதியில் உள்ள இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான நிலத்தில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டடம் உட்பட பல சொத்துக்கள் சேதமடைந்ததாக இலஞ்ச ஒழிப்பு ஆணையகம் தெரிவித்துள்ளது. (அ)

# அரசியல் செல்வாக்கின்றிய நியமனத்தால் கடமைகளைச் சிறப்பாகச் செய்யும் சூழல்!

கொழும்பு, ஓக. 27

எந்தவொரு அரசியல் செல்வாக்குமின்றி பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டமை குறித்துத் தான் மகிழ்ச்சியடைவதாகவும், அது தனது உத்தியோகபூர்வ கடமைகளைச் சிறப்பாகச் செய்வதற்குச் சாதகமான சூழலை உருவாக்கும் என்றும் பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய சபாநாயகரிடம் தெரிவித்தார்.

பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் சந்தித்தார். இதன்போது சபாநாயகர் பொலிஸ் மா அதிபர் அதிகாரிகளுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அரசியலமைப்புப் பேரவையின் ஒருமித்த தீர்மானத்திற்கு அமைய, முழுமையான வெளிப்படைத் தன்மையுடனும் இந்த நியமனம் இடம்பெற்றிருப்பதாக சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய, எந்தவொரு அரசியல் செல்வாக்கும் இன்றி பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டமை குறித்து தான் மகிழ்ச்சியடைவதாகவும், அது தனது உத்தியோகபூர்வ கடமைகளைச் சிறப்பாகச் செய்வதற்குச் சாதகமான சூழலை உருவாக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கை கள் குறித்தும் ஆராயப்பட்டது.

மிகவும் ஒழுக்கமான முறையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என சபாநாயகர் முன்பு விடுத்த கோரிக்கையை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக பொலிஸ் மாஅதிபர் இங்கு தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டம் அடுத்த மாதம் நீக்கப்படும்

## தமிழரசின் சிறீநேசன் எம். பி. நம்பிக்கை

மட்டக்களப்பு, ஒக. 27

**பயங்கரவாத தடைச் சட்டம் அடுத்த மாதம் நீக்கப்படும் என்று நான் நம்புகின்றேன். இலங்கையில் இனப்பிரச்னை பெரிதும் காணப்படுகிறது. இனப் பிரச்னை தீர்க்கப்படாத காரணத்தால்தான் இலங்கை வங்குரோத்தடைந்த நாடாக இருக்கிறது என்பதை நாங்கள் பாராளுமன்றத்திலும் சுட்டிக்காட்டி இருக்கின்றோம் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞான முத்து சிறீநேசன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் காக்காச்சுபட்டைக் கிராமத்துக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை சென்ற சிறீநேசன் எம். பி., அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி குறைநிறைகளைக் கேட்டறிந்துகொண்டார்.

இதன் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என நான் நம்புகின்றேன். கடந்த பாராளுமன்ற அமர்வின்போதும் நாம் திட்டவட்டமாக இதனைக் கேட்டிருந்தோம்.

பயங்கரவாத தடைச் சட்டம் என்பது மனித குலத்துக்கு பயங்கரமான அபாயத்தை ஏற்படுத்துகின்ற சட்டம். இலங்கைக்கு அவமானத்தையும் கேவலத்தையும் ஏற்படுத்தும் ஒரு சட்டம். அந்த சட்டத்தை விரைவில் அகற்ற வேண்டும். இதன் மூலமாக ஜே.ஆர். ஜெயவர்த்தன தொடக்கம் கடந்து வந்தவர்கள் இச்சட்டத்தை அகற்றாமல் அந்த கொடிய சட்டத்தின் மூலமாக அரச பயங்கரவாதத்தை செய்திருந்தார்கள்.

தற்போதைய அரசாங்கம் இந்தச் சட்டத்தை நீக்குவதன் மூலமாக இந்த அரசாங்கம் ஒரு பெருமையைத் தேடிக்கொள்ளும். வருகின்ற மாதத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என ஐக்கிய நாடுகள் சபைக்கு உத்தரவாதம் கொடுத்துவிட்டதாக கூறியிருக்கிறார்கள். நாங்களும் நம்புகின்றோம். அந்த சட்டம் அகற்றப்படலாம், சட்டத்தை அகற்றிவிட்டு அதற்கு சமமான இன்னுமொரு சட்டத்தை கொண்டுவரக்கூடாது என்றும் நாங்கள் சொல்லியிருந்தோம்.

சர்வதேச ரீதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினம் எதிர்வரும் 30ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட இருக்கிறது. அந்த தினத்துக்கு சகல தமிழ்த் தரப்புகளும் ஆதரவுகளை வழங்க வேண்டும். காணாமலாக்கப்பட்டவர்கள் என்கின்ற விடயம் உண்மையான விடயம். காணாமலாக்கப்பட்டவர்கள் புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதும் உண்மையான விடயம். ஆகவே காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை எதிர்வரும் 30ஆம் திகதி அனுஷ்டிக்கின்றபோது சகல மக்களும் அதற்கான போராட்டத்துக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். அது ஆயுதம் ஏந்திய போராட்டம் அல்ல. அஹிம்சை ரீதியான, ஜனநாயக ரீதியான, மனித உரிமையை பெறுகின்ற ஒரு போராட்டமாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் போராட்டத்துக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்"-என்றார். (எ)

# இனியபாரதியின் மற்றுமொரு சகா சி.ஐ.டியினரால் கைது!

மட்டக்களப்பு, ஒக. 27

இனிய பாரதியின் சகாவான மட்டு. களுவங்கேணியைச் சேர்ந்த பாலசுந்தரம் என்பவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை களுவங்கேணியில் வீட்டில் வைத்து சி.ஐ.டியினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜூலை 6ஆம் திகதி அம்பாறை திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட 2005 மற்றும் 2008 இற்கு இடையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல், சித்திரவதைக் கூடங்களை நடத்துதல், மிரட்டிப் பணம் பறித்தல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புடைய கருணா அணியைச் சேர்ந்த இனியபாரதி என்றழைக்கப்படும் கே. புஸ்பகுமார் அவரது சகாவான சசீதரன் தவசீலன் ஆகியோரை குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர்.

இதனையடுத்து இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இனியபாரதியுடன் சேர்ந்து இயங்கிவந்தவரும் அவரின் சகாவான களுவங்கேணியைச் சேர்ந்த பாலசுந்தரம் என்பவரை இவரது வீட்டில் வைத்து திங்கட்கிழமை பகல் குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர்.

இதேவேளை இனிய பாரதி அவரது சகா கைது தொடர்பாக கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு கடந்த ஜூலை 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அந்த அறிக்கையில் 2005 மற்றும் 2008 இற்கு இடையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல், சித்திரவதைக் கூடங்களை நடத்துதல் மற்றும் மிரட்டிப் பணம் பறித்தல் குறித்து நீண்ட விசாரணையை மேற்கொண்டது.

இந்த விசாரணைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளின் அடிப்படையில், மேற்கூறிய குற்றங்களில் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களை மேற்கூறிய பிரிவின் அதிகாரிகள் குழு 2025.07.06 அன்று திருக்கோவில் மற்றும் சந்திவெளி பகுதிகளில் 45 மற்றும் 44 வயதுடைய இரு சந்தேக நபர்களை கைது செய்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# சுகாதார பரிசோதகருக்கு வர்த்தகர் அச்சுறுத்தல்

மட்டக்களப்பு, ஒக. 27

கடமையிலிருந்த பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவருக்கு வர்த்தகர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகருக்கு வர்த்தகர் ஒருவரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை குறித்த வர்த்தகருக்கு சொந்தமான வர்த்தக நிலையத்தில் பழுதடைந்த பழங்கள் மற்றும் மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு குறித்த வர்த்தகர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், குறித்த வர்த்தக நிலையத்துக்கு முன்னால் மேற்படி பொதுச் சுகாதார பரிசோதகர் சென்று கொண்டிருந்த நிலையில் குறித்த பொதுச் சுகாதார பரிசோதகரை அச்சுறுத்தியதுடன் தனது சீருடைகளை களைவதாகவும் ஒரு வாரத்துக்குள் வேலையிலிருந்து இடைநிறுத்துவதாகவும் அச்சுறுத்தியுள்ளதாக குறித்த பொதுச் சுகாதார பரிசோதகர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# 35 வருடங்களுக்குப்பின் மக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது

சம்மாந்துறை, ஒக. 27

அரச நிதியின் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்ட சம்மாந்துறை, கூட்டுறவு கிராமிய வங்கி கட்டடத்தை மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வும் மண்ணெண்ணெய் மீள்விநியோகமும் மற்றும் புதிய பம்களை மக்கள் பாவனைக்கு வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் எம். பி. சி. எஸ். வளாகத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை, சம்மாந்துறைப் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஏ. மஜீது லெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதன்போது பொது மக்களுக்கு 35 வருடங்களுக்குப் பின்னர் மண்ணெண்ணெய் வழங்கி வைக்கப்பட்டது. (எ-06)




# காரைதீவில் நீதியின் ஓலம் கையெழுத்து வேட்டை

காரைதீவு, ஒக. 27

ஈழத் தமிழர்களுக்கு இதுவரை காலமும் நடந்து கொண்டிருக்கும் அநீதிகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள சர்வதேச நீதி கோரிய போராட்டமான "நீதியின் ஓலம்" எனும் மையக் கருத்துடனான பொது மக்கள் கையெழுத்து சேகரிக்கும் போராட்டமானது நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் காரைதீவில் நடைபெற்றது. (எ-08)



# 95 லீற்றர் கசிப்புடன் 30 பேர் கைது

காத்தான்குடி, ஒக. 27

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பிரதேசங்களில் சுமார் 95 லீற்றர் கசிப்புடன் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி, தாளங்குடா, புதுக்குடியிருப்பு, கிரான்குளம், நாவற்குடா, கல்லடி ஆகிய பிரதேசங்களில் நேற்று முன்தினம் பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து சுமார் 95 லீற்றர் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# காஸா மருத்துவமனைமீது இஸ்ரேல் கடும் தாக்குதல்!

## 5 ஊடகவியலாளர்கள் உட்பட 20 பேர் பலி



காஸா, ஒக. 27

**காஸாவின் கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் மருத்துவமனை மீது இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் 5 ஊடகவியலாளர்கள் உட்பட 20 பேர் உயிரிழந்தனர்.**

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் ஹமாஸ் அமைப்பினர் - இஸ்ரேல் இராணுவம் இடையில் மோதல் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் மருத்துவமனை மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியது.

இதில் 5 ஊடகவியலாளரகள் உட்பட 20 பேர் உயிரிழந்ததாக காஸா பொதுமக்கள் பாதுகாப்பு முகமையின் செய்தித் தொடர்பாளர் மழுத் பசல் தெரிவித்துள்ளார். மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவமும் ஒப்புக்கொண்டுள்ளது.

இது குறித்து அல் ஜசீரா வெளியிட்ட அறிக்கையில், "இஸ்ரேல் தாக்குதலில் எங்கள் புகைப்பட கலைஞர் முகமது சலமா உயிரிழந்தார். இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்" எனக் கூறப்பட்டுள்ளது. இதுபோல, அசோசியேட்டடு பிரஸ் பகுதிநேர செய்தியாளர் மரியம் டக்கா என்பவரும் உயிரிழந்தார். இஸ்ரேல், காஸா இடையிலான போரில் கடந்த 2 ஆண்டுகளில் 200 ஊடகவியலாளர்கள் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)



# ராஜஸ்தானில் கனமழை, வெள்ளம்: 4 சிறார்கள் உட்பட 6 பேர் உயிரிழப்பு

ஜெய்ப்பூர், ஒக. 27

இந்தியாவின் ராஜஸ்தானில் கடந்த சனிக்கிழமை அதிகாலை முதல் கனமழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக தவுசாவில் ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணி வரையிலான 25 மணி நேரத்தில் 29 சென்ரி மீற்றர் மழை பெய்துள்ளது. இதனால், பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

உதய்பூரின் தபோக் பகுதியில் மழைநீர் நிரம்பிய பள்ளத்தில் மூழ்கி 4 சிறார்கள் உயிரிழந்தனர்.

ஜெய்ப்பூரில் வரலாற்று சிறப்புமிக்க அஜ்மீர் கோட்டை சுற்றுச்சுவரின் ஒருபகுதி இடிந்து விழுந்தது. இதில் வாகனங்கள் சேதமடைந்தன. வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணி நடைபெறுகிறது. (எ)

# இந்தியர்களுக்கு அதிகளவில் வேலை வழங்குகிறது ரஷ்யா

மொஸ்கோ, ஒக. 27

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் வெளிநாட்டினருக்கான குடியேற்ற விதிமுறைகளை கடுமையாக்கி வருகின்றன. இந்த சூழ்நிலையில், இந்தியர்களை அதிகளவில் வேலையில் இணைக்க ரஷ்ய நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன.

இதுகுறித்து ரஷ்யாவுக்கான இந்தியத் தூதுவர் வினய் குமார், டாஸ் செய்தி நிறுவனத்துக்கு கூறுகையில், ரஷ்யாவில் மனித வளம் தேவைப்படுகிறது. இந்தியாவில் திறமையான மனிதவளம் உள்ளது. எனவே, ரஷ்ய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு அந்த நாட்டு நிறுவனங்கள் அதிகளவில் இந்தியர்களை பணியமர்த்தி வருகின்றன.

குறிப்பாக கட்டுமானம் மற்றும் ஆடைத் துறைகளில் பெரும்பாலானவர்கள் பணியமர்த்தப்படுகின்றனர். இதுபோல இயந்திரங்கள் மற்றும் மின்னணு துறைகளிலும் இந்தியர்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக தூதரக சேவைகளின் பணிச்சுமை அதிகரித்து வருகிறது- என்றார். (எ)

# அமெரிக்காவுக்கு ஈரான் அடிபணியாது

## உச்ச தலைவர் கமெனி உறுதி



தெஹ்ரான், ஒக. 27

அமெரிக்காவுக்கு ஒருபோதும் ஈரான் அடிபணியாது.

அணு சக்தித் திட்டம், தீர்க்க முடியாத பிரச்னை என்று அந்த நாட்டின் உச்ச தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஈரான் ஆன்மீகத் தலைவர் கமெனி மேலும் கூறுகையில்,

"அமெரிக்கா கொடுக்கும் அழுத்தம் பலன் தராது. ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய 12 நாட்கள் தாக்குதலால் அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை தொடர முடியாது. அணு சக்தித் திட்டம், தீர்க்க முடியாத பிரச்னை. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் எங்களுக்குள் பிரிவினையை விதைக்க முயற்சி செய்கின்றன. கடவுளின் ஆசியால் மக்கள் ஒன்றுபட்டிருக்கின்றனர்" - என்றார்.

கடந்த மாதம் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே 12 நாட்கள் கடுமையான மோதல் நிகழ்ந்தது. ஈரானில் அணு விஞ்ஞானிகளையும் நூற்றுக்கணக்கான மக்களையும் இஸ்ரேல் குண்டுவீசி கொன்றது. பதிலுக்கு ஈரான் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலிலும் கடும் சேதங்கள் ஏற்பட்டன.

இடையில் அமெரிக்காவும் ஈரானின் 3 அணுசக்தி நிலையங்களை தாக்கியது. இதன் பாதிப்புகள் இன்னும் மதிப்பிடப்படவில்லை. இருப்பினும், அணு சக்தி நிலையங்களை முற்றிலும் அழித்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஆனால், இதனை ஈரான் மறுத்துள்ளது. (எ)

# அமெரிக்க எல்லை அருகே பறந்த ரஷ்ய உளவு விமானம்

## பரபரப்பு சம்பவம்

வாஷிங்டன், ஒக. 27

அமெரிக்க எல்லை அருகே பறந்த ரஷ்ய உளவு விமானத்தால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் எல்லையோர மாகாணமாக அலாஸ்கா திகழ்கிறது. அலாஸ்கா மாகாணம் கனடா அருகே அமைந்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவின் அலாஸ்கா வான் எல்லை அருகே நேற்று முன்தினம் ரஷ்ய உளவு விமானம் பறந்துள்ளது. ரஷ்யாவின் இலூசின் - 20 உளவு விமானம் அமெரிக்க எல்லை அருகே பறந்ததை அலாஸ்காவில் நிறுவப்பட்டுள்ள வான் பாதுகாப்பு ரேடார் கண்டறிந்தது.

இதையடுத்து உடனடியாக அமெரிக்காவின் எப்-16 போர் விமானங்கள் விரைந்து சென்று ரஷ்ய உளவு விமானத்தை இடைமறித்து தடுத்து நிறுத்தின. இதையடுத்து ரஷ்ய உளவு விமானம் சர்வதேச வான்பரப்புக்குள் நுழைந்தது.

கடந்த ஒருவாரத்தில் அலாஸ்கா எல்லை அருகே 3 முறை ரஷ்ய உளவு விமானங்கள் பறந்துள்ளன. இந்த சம்பவத்தால் அப்பகுதியில் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

உக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பாக கடந்த சில நாட்களுக்கு முன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புடின் இடையே அலாஸ்காவில் பேச்சுவார்த்தை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (எ)

# காஸா மாணவர்கள் பிரித்தானியாவில் கல்வி கற்க அனுமதி

லண்டன், ஒக. 27

காஸாவில் உள்ள சுமார் 40 மாணவர்கள் நிதியளிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக எதிர்வரும் வாரங்களில் பிரித்தானியாவுக்கு வரவழைக்கும் திட்டங்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

செவனிங் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில்கள் ஊடாக ஒன்பது மாணவர்களுக்கு காஸாவை விட்டு வெளியேற உதவி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

செவனிங் திட்டம் என்பது, சர்வதேச மாணவர்கள் ஓராண்டு முதுகலைப் பட்டப்படிப்பைப் படிப்பதற்காக பெருமளவில் அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் கல்வி திட்டமாகும்.

ஏனைய தனியார் திட்டங்கள் மூலம் முழுமையாக நிதியளிக்கப்பட்ட புலமைப் பரிசில்கள் கிடைத்த சுமார் 30 மாணவர்களுக்கு உதவுவதற்கான திட்டங்களுக்கும் உள்நாட்டு செயலாளர் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வியட்நாமை தாக்கிய கஜிகி புயல் 3 இலட்சம் மக்கள் வெளியேற்றம்

ஹைனான், ஒக. 27

வியட்நாமை கஜிகி புயல் தாக்கியது. இதனால் 3 இலட்சம் பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

தாய்லாந்தின் வடகிழக்கு பகுதிகள் மற்றும் லாவோஸ் நாடுகளில் புயலின் தாக்கம் நேற்றுக் காலை கடுமையாக உணரப்பட்டது.

சீனாவின் தெற்கு பகுதியில் உள்ள சான்யா நகரை கடந்த வார இறுதியில் கஜிகி என பெயரிடப்பட்ட சக்தி வாய்ந்த புயல் தாக்கியது. இதனால் மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியது.

அத்தோடு சீனாவில் இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. தாழ்வான பகுதிகள் மற்றும் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. கனமழையால் பாலம் இடிந்து விழுந்ததில் 12 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் வியட்நாமை நோக்கி கஜிகி புயல் நகர்ந்தது. நாட்டின் கடலோர மாகாணங்களான தான்ஹோவா, குவாங்டிரை, ஹியூ மற்றும் டானாங் பகுதிகளில் கஜிகி புயல் மணிக்கு 175 கிலோ மீற்றர் வேகத்தில் தாக்கும் என வானிலை ஆராய்ச்சியாளர்கள் கணித்திருந்தனர்.

இந்த புயல் வியட்நாமின் மையப் பகுதியை தாக்கியது. சூறைக்காற்றின் வேகத்துக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் பல நகரங்கள் பாதிப்புக்குள்ளாகின. அத்தோடு, வியட்நாமில் நேற்று முன்தினம் மதியம் முதல் கன முதல் மிகக் கனமழை பெய்தது. பலத்த காற்றும் வீசியது.


முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்த நகரங்களில் உள்ள 3 இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# உதைபந்தாட்ட உலகில் ரொனால்டோ சாதனை



ஹொங்கொங், ஒக. 27

உதைபந்தாட்ட உலகில் ரொனால்டோ மற்றுமொரு மாபெரும் சாதனை படைத்துள்ளார். அல் நாசர் அணிக்காக 100 கோல்கள் அடித்ததன் மூலம் ரொனால்டோ இந்தச் சாதனையை படைத்துள்ளார்.

12ஆவது சவுதி சுப்பர் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் அல் ஆலி- அல் நாசர் அணிகள் ஹொங்கொங்கில் மோதின. விறுவிறுப்பான இந்த ஆட்டம் வழக்கமான நேரம் முடிவில் 2-2 என்ற கோல் கணக்கில் சமனானது. இதையடுத்து வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க பெனால்டி முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் அல் ஆலி 5-3 என்ற கோல் கணக்கில் அல் நாசர் அணியை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

அல்-நாசர் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 41ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி கோல் அடித்தார். கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் சவுதி அரேபியாவின் அல் நாசர் அணிக்காக விளையாடும் ரொனால்டோ அந்த அணிக்காக அடித்த 100ஆவது கோலாக இது பதிவானது.

இதன் மூலம் உதைபந்தாட்ட உலகில் 4 அணிகளுக்காக 100 கோல்களை பதிவு செய்த முதல் வீரர் என்ற புதிய சாதனையை ரொனால்டோ படைத்தார். முன்னதாக அவர் ரியல் மட்ரிட் அணிக்காக (ஸ்பெயின்) 450 கோல்களும் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக (இங்கிலாந்து) 145 கோல்களும் யுவெண்டஸ் அணிக்காக (இத்தாலி) 101 கோல்களும் அடித்திருந்தார். உதைபந்தாட்ட போட்டியில் ரொனால்டோ பல அசத்தல் சாதனைகளை படைத்து வருகிறார். அதில் தற்போது இதுவும் இணைந்துள்ளது.

சர்வதேச உதைபந்தாட்ட போட்டியிலும் அதிக கோல் அடித்தவர்களின் பட்டியலில் 40 வயதான கிறிஸ்டியானோ ரொனால்டோ (221 ஆட்டங்களில் 138 கோல்) முதலிடத்தில் உள்ளார். (எ)

# மகளிர் உலக கிண்ண தொடர் பாகிஸ்தான் அணி அறிவிப்பு



லாகூர், ஒக. 27

மகளிர் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் (செப்ரெம்பர்) 30ஆம் திகதி முதல் நவம்பர் 2ஆம் திகதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்த நிலையில் இந்தத் தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பாத்திமா சனா தலைமையிலான இந்த அணியில் மொத்தம் 15 வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளனர்.

பாகிஸ்தான் அணி விவரம் பின்வருமாறு:-பாத்திமா சனா, முனீபா அலி சித்திக், அலியா ரியாஸ், டயானா பைக், எய்மான் பாத்திமா, நஷ்ரா சுந்து, நடாலியா பர்வைஸ், ஒமைமா சொஹைல், ரமீன் ஷமிம், சதாப் ஷமாஸ், சாடியா இக்பால், ஷவால் சுல்பிகர், சித்ரா அமின், சித்ரா நவாஸ், சையதா அரூப் ஷா.ரிசர்வ் பட்டியல்: குல் பெரோசா, நஜிஹா அல்வி, துபா ஹாசன், உம்-இ-ஹானி, வஹீதா அக்தர் பாகிஸ்தான் அணி தனது முதல் ஆட்டத்தில் பங்களாதேஷுடன் ஒக்ரோபர் 2ஆம் திகதி விளையாடவுள்ளது. (எ)

# அமெரிக்க ஓபின் ரென்னிஸ்: ஜோகோவிச் முன்னேற்றம்



நியூயோர்க், ஒக. 27

அமெரிக்க ஓபின் ரென்னிஸ் தொடரில் நோவக் ஜோகோவிச் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓபின் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான செர்பியாவின் ஜோகோவிச், அமெரிக்காவின் லியர்னர் டீன் உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே சிறப்பாக செயல்பட்ட ஜோகோவிச் 6-1, 7-6 மற்றும் 6-2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

# ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் ஷகிப் அல் ஹசன் சாதனை



டாக்கா, ஒக. 27

பங்களாதேஷ் அணியின் சகல துறை வீரர் ஷகிப் அல் ஹசன் ஒரு மிகப்பெரிய சாதனையைப் படைத்துள்ளார். ரி - 20 கிரிக்கெட்டில் 500 விக்கெட்கள் என்ற மைல்கல்லை அவர் எட்டியுள்ளார். மேற்கு இந்திய தீவுகளில் நடைபெற்று வரும் கரீபியன் பிரீமியர் லீக்கில் (சி.பி.எல்) ஆண்டிகுவா மற்றும் பார்புடா பால்கன்ஸ் அணியில் விளையாடும் ஷகிப், கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் பேட்ரியாட்ஸ் அணி வீரர் முகமது ரிஸ்வானை ஆட்டமிழக்கச் செய்தார்.

இதன் மூலம் ரி - 20 போட்டிகளில் 500 விக்கெட்கள் என்ற மைல்கல்லை எட்டி, இந்த சாதனையை படைத்த ஐந்தாவது பந்து வீச்சாளரானார். இந்தப் போட்டியில் மொத்தம் 3 விக்கெட்களை ஷகிப் அல் ஹசன் வீழ்த்தினார்.

ரி - 20 போட்டிகளில் 4 பந்து வீச்சாளர்கள் மட்டுமே இதற்கு முன்பு 500இற்கும் மேற்பட்ட விக்கெட்களை வீழ்த்தியிருந்தனர். ஆப்கானிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் 660 விக்கெட்களுடன் முதலிடத்தில் உள்ளார்.

டுவைன் பிராவோ (631 மேற்கு இந்திய தீவுகள்), சுனில் நரைன் (590 மேற்கு இந்திய தீவுகள்) மற்றும் இம்ரான் தாஹிர் (554 தென்னாபிரிக்கா) ஆகியோர் மட்டுமே 500 விக்கெட்கள் வீழ்த்திய வீரர்கள்.

தற்போது ஷகிப் அல் ஹசன் 502 விக்கெட்களுடன் இந்தப் பட்டியலில் இணைந்துள்ளார். மேலும், ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் 7000இற்கும் மேற்பட்ட ஓட்டங்களையும் 500இற்கும் மேற்பட்ட விக்கெட்களையும் வீழ்த்திய ஒரே வீரர் ஷகிப் அல் ஹசன் தான் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# 47 பந்துகளில் சதம் அடித்து கேமரூன் கிரீன் சாதனை

மெக்கே, ஒக. 27

ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 47 பந்துகளில் சதம் அடித்து கேமரூன் கிரீன் சாதனை படைத்துள்ளார்.

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் கடைசி ஆட்டம் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது. இதில், தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சை வெளுத்து வாங்கிய கேமரூன் கிரீன் வெறும் 47 பந்துகளில் சதம் விளாசினார்.

இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதி வேகமாக சதம் அடித்த 2ஆவது அவுஸ்திரேலிய வீரர் என்ற சாதனையை கேமரூன் கிரீன் படைத்துள்ளார்.

அந்தப் பட்டியல் வருமாறு,

1. மேக்ஸ்வெல் - 40 பந்துகள்,
2. கேமரூன் கிரீன் - 47 பந்துகள்,
3. மேக்ஸ்வெல் - 51 பந்துகள்,
4. [illegible] - 57 பந்துகள். (எ)

# இந்தியாவுக்கு எதிரான 2 போட்டிகளில் வெற்றி

லாகூர், ஒக. 27

ஆசிய கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிரான 2 போட்டிகளிலும் பாகிஸ்தான் அணிதான் வெற்றி பெறும் என்று ஹரிஸ் ரவூப் தெரிவித்தார்.


நடப்பு சம்பியன் இந்தியா உட்பட 8 அணிகள் பங்கேற்கும் 17ஆவது ஆசிய கிண்ணத் கிரிக்கெட் தொடர் செப்ரெம்பர் 9ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளது. அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐ.சி.சி. ரி - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு ஆசிய அணிகள் தயாராகும் பொருட்டு இந்தத் தொடர் இம்முறை ரி - 20 வடிவில் நடத்தப்படவுள்ளது. இந்தத் தொடரில் பங்கேற்றுள்ள அணிகள் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி "ஏ" பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமான் அணிகளும், "பி" பிரிவில் இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், ஹொங்கொங் அணிகளும் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறும்.

இதில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் க்கிய அரபு அமீரகத்தை செப்ரெம்பர் 10ஆம் திகதி டுபாயில் சந்திக்கிறது. இதைத்தொடர்ந்து பரம எதிரியான பாகிஸ்தானை செப்ரெம்பர் 14ஆம் திகதி டுபாயிலும் ஓமானை செப்ரெம்பர் 19ஆம் திகதி அபுதாபியிலும் எதிர்கொள்கிறது. இறுதிப்போட்டி செப்ரெம்பர் 28ஆம் திகதி டுபாயில் அரங்கேறுகிறது.

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் நேருக்கு நேர் மோதவுள்ளதால் இந்தத் தொடரின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்து காணப்படுகிறது. இந்த போட்டியில் வெற்றி பெற வாய்ப்புள்ள அணி குறித்து பல முன்னாள் வீரர்கள் தங்களது கணிப்பினை வெளியிட்டு வருகின்றனர். - என்றார். (எ)

# அமெரிக்க ரென்னிஸ்: ஜெசிகா அபார வெற்றி



நியூயோர்க், ஒக. 27

அமெரிக்க ஓபின் ரென்னிஸ் தொடரில் ஜெசிகா பெகுலா அபார வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்த ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, எகிப்தின் மாயர் ஷெரிப் உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே சிறப்பாக செயல்பட்ட பெகுலா 6-0 மற்றும் 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில் பிணையில்...

எடுக்கப்பட்டது.

இதன்போது, கோட்டை நீதிவான் நீதிமன்றம் முன்பாக பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து, "அடக்குமுறைக்கு எதிராக" என்ற பெயரில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்னெடுத்த போராட்டம் காரணமாகவே இந்தப் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதையடுத்து, நீதிமன்ற வளாகத்துக்கு செல்லும் வீதியை பாதுகாப்பு பணியிலிருந்த படையினர், பொலிஸாரால் மூடப்பட்டது. மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். எனினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரின் வீதித் தடைகளை உடைத்து நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைய முயற்சித்தமையால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது. இந்த பதற்றமான சூழலின்போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டிருந்தார்.

இதனிடையே, கலமடக்கும் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், நீர்த்தாரை வாகனங்கள் சகிதம் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறான சூழலுக்கு மத்தியில் ரணில் விக்கிரமசிங்கவின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தமையால் நீதிமன்றத்தில் முற்படவில்லை. இது தொடர்பில் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தப்பட்டது. எனவே, மெய்நிகர் வழியில் (ஷூம்) ரணில் விக்கிரமசிங்க வழக்கில் தோன்றினார்.

விசாரணையின்போது, ரணில் விக்கிரமசிங்கவின் விரிவான மருத்துவ அறிக்கையை அவரின் சட்டத்தரணிகள் மன்றில் சமர்ப்பித்தனர்.

ரணில் விக்ரமசிங்க சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, தனது கட்சிக்காரருக்கு இதயத்தின் நான்கு முக்கிய தமனிகளில் மூன்று அடைப்புகள் உள்ளன. இதய திசுக்கள் நுரையீரல் தொற்றுடன் நெக்ரோசிஸால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

சந்தேக நபரின் உடல்நிலை குறித்து மருத்துவ விவரங்களையும் ஓர் இருதய நிபுணர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். இதன்படி, சந்தேகநபர் கணிசமான காலமாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இதய திசுக்களின் நெக்ரோசிஸூம் நுரையீரல் தொற்றும் இப்போது கண்டறியப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், வெளித்தோற்றத்தால், இது போன்ற கடுமையான மருத்துவ நிலைமைகள் இருப்பதை ஒருவர் கவனிக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, வழக்கின் உண்மைகளையும் சந்தேக நபரின் மருத்துவ நிலையையும் மேற்கோள்காட்டி பிணை வழங்குமாறு பிரதிவாதியின் சட்டத்தரணிகள் கோரினர்.

எனினும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியர் திலீப பீரிஸ், நீதிமன்ற நடவடிக்கைகளை சுற்றியுள்ள சமீபத்திய நடத்தை குறித்து நீதிமன்றத்தில் கடுமையான கவலைகளை எழுப்பினார். அத்துடன், கடந்த வெள்ளிக்கிழமை விசாரணையின்போது, நீதிமன்ற உத்தரவு காணொலி பதிவு செய்யப்பட்டு சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சந்தேக நபரான ரணில் விக்கிரமசிங்க விசாரணைக்கூடத்தில் இருந்தபோது ஒளிப்படங்கள் எடுக்கப்பட்டு இணையத்தில் பகிரப்பட்டன. உத்தரவு வழங்கப்பட்ட உடனேயே வெளியிலிருந்து குழுவொன்று "பெலவத்தை"யிலிருந்து தீர்ப்பு வழங்கப்பட்டதாகக் கூறி சத்தமிட்டது. இதுபோன்ற நடவடிக்கைகள் நீதிமன்ற அவமதிப்புக்கு சமம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், எவரையும் அவமதிக்கவோ அல்லது நீதிமன்றத்துக்கு அவமானத்தை ஏற்படுத்தவோ அனுமதிக்க முடியாது. தாங்கள் அநுரவின் ஒப்பந்ததாரர்கள் அல்லது அடுத்த சட்டமா அதிபராக ஆசைப்படுபவர்கள் என்றும் சிலர் கூறினர். அத்துடன், சந்தேக நபர் ஒரு மணி நேரம்கூடத் தடுப்புக் காவலில் வைக்கப்படவில்லை என்றும் மேலதிக மன்றாடியர் திலீப பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

இதேநேரம் பிரதிவாதியின் நோய் நிலைமை குறித்து முறையான மருத்துவ குழுவினர் அவரைப் பரிசோதித்திருக்க வேண்டும். ஆகவே, ரணில் விக்ரமசிங்கவுக்கு பிணை வழங்குவதை சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்ந்தும் ஆட்சேபிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, ரணிலுக்கான அழைப்புப் பத்திரத்தின் சட்டபூர்வத்தன்மை இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் மேலதிக மன்றாடியர் நாயகம் திலீப பீரிஸ் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

அத்துடன், தனது வாய்மொழி சமர்ப்பிப்புகளில் ரணில் விக்கிரமசிங்கவை பிணையில் விடுவிக்கும் விதிவிலக்கான சூழ்நிலைகளை பிரதிவாதி தரப்பு முன்வைக்காவிட்டால் விசாரணை முடியும் வரை அவரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கைகளைப் பரிசீலித்த பின்னர், ரணில் விக்ரமசிங்க பிணையில் செல்ல கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்தது. அவர் தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான மூன்று சரீர பிணைகளில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை, இந்த வழக்கு விசாரணையின் போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நாடளாவிய ரீதியிலிருந்து நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்தனர். இதனால், நீதிமன்ற நடவடிக்கைகளுக்குக் கடும் நெருக்கடி ஏற்பட்டிருந்தது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

முன்னதாக,

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 2023 செப்ரெம்பர் 22, 23 ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்வதாகக் கூறி தனிப்பட்ட பயணத்தில் ஈடுபட்டதன் மூலம் ஒரு கோடியே 66 இலட்சம் ரூபாய் வரையான அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். அன்றிரவு 10 மணிக்கு அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த நிலையில், நோய் பாதிப்புக்கு உள்ளான அவர் சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர், கொழும்பு தேசிய மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## மண்டைதீவில்...

நடவடிக்கையின்போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளைச் சேர்ந்த 80இற்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர் - பலர் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பலர் கொல்லப்பட்டு மண்டைதீவு 2ஆம் வட்டார பகுதியில் கிணறுகளில் போடப்பட்டு புதைக்கப்பட்டனர் என்று கூறப்பட்டது. இவ்வாறு 50இற்கும் மேற்பட்டவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டன என்று கூறப்படும் இடத்திலேயே நேற்றைய தினம் அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் இருவர் முதன்மை சுடரை ஏற்றினர். இதைத் தொடர்ந்து நிகழ்வில் பங்கேற்ற பலரும் அஞ்சலி செலுத்தியிருந்தனர். (ஐ)

# மாகாண சபை தேர்தலை நடத்த நிச்சயிக்கப்பட்ட சட்டம் இல்லை!

## தேர்தல்கள் ஆணையாளர்

கொழும்பு, ஒக. 27

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு உறுதி யான மற்றும் நிச்சயிக்கப்பட்ட சட்டம் எதுவும் தற்போது கிடையாது. சட்டமியற்றும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடையாது. மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்த அரசாங்கம் பாராளுமன்றத் தின் ஊடாக உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஜனநாயக முறைமைக்கமைய தேர்தலை நடத்த முழுமையாக ஒத்துழைப்போம் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமை தொடர்பில் நடைபெற்ற நேற்று முன்தினம் கலந்துரையாடலின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், எதிர்வரும் நான்கு ஆண்டுக்கான தேர்தல் மூலோபாயத் திட்டங்களை வகுக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். மாகாண சபைகளை மறக்கவில்லை. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அரச அதிகாரிகள் ஊடாக மாகாண சபைகள் நிர்வகிக்கப்படுகிறது. இது ஜனநாயகத்துக்கு பொருத்தமான தாக அமையாது.

தேர்தலை நடத்துவதாயின் அதற்குரிய சட்டம் அவசியம். ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் இல்லாமல் தேர்தலை நடத்தும் இயலுமை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடையாது. சட்டமியற்றும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு கிடையாது. ஆகவே, எமது விருப்பத்திலான சட்டத்துக்கு அமைய தேர்தலை நடத்த முடியாது. சட்டவாக்க துறையால் இயற்றப்படும் சட்டத்துக்கு அமைவாகவே தேர்தலை நடத்த முடியும்.

- என்றார். (ஐ)

## சுயாதீன...

நேற்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை வழங்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இது நாட்டில் அரசமைப்பு சார்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும். சுயாதீன நீதித்துறையால் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. பக்கச்சார்பின்றி வெளிப்படை தன்மையுடன் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பமாகும்.

நீதிமன்றம் தொடர்ந்தும் இந்தக் கொள்கையில் நிலைத்திருக்கும் என்று நம்புகின்றோம். நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்க முன்னரே தீர்ப்பு தொடர்பில் பல்வேறு விடயங்கள் சமூக வலைதளங்களில் தெரிவிக்கப்பட்டன.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சட்டத்தின் ஆட்சி சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. எவ்வாறிருப்பினும் தற்போது அந்த முயற்சிகள் சுயாதீன நீதிமன்றத்தால் முறியடிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்காக முன்னிலையான சட்டத்தரணிகள், அவரின் விடுதலைக்காக ஒன்று திரண்ட ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி உள ளிட்ட வெவ்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச வேண்டாம் என்றும், அழுத்தங்களால் பின்னோக்கிச் செல்ல வேண்டாம் என்றும் நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். சட்டத்தின் மூலம் உங்களின் சுதந்திரம், உரிமை பாதுகாக்கப்படும் என நம்புகின்றோம். யாருக்கும் எதற்காகவும் மக்களை அச்சுறுத்த முடியாது

- என்றார். (ஐ)

## நாட்டின்....

ஆடை கணிக்கக்கூடிய பொருளும் கண்டறியப்பட்டன.

முன்னைய அகழ்வின்போது 147 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்ட நிலையில் நேற்று வெளிப்பட்ட 16 எலும்புக்கூடுகளுடன் இந்தப் புதைகுழியில் கண்டறியப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 163ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கண்டறியப்பட்டவற்றில் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியாக அரியாலை - சித்துப்பாத்தி மாறியுள்ளது.

2013 இல் கண்டறியப்பட்ட மன்னார் - சதொச மனிதப் புதைகுழியில் 28 சிறார்களுடையவை உட்பட 376 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதுவே நாட்டில் கண்டறியப்பட்ட மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக உள்ளது. இதற்கு அடுத்து அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தற்போது உள்ளது. மாத்தளை மனிதப் புதைகுழி மூன்றாவது பெரிய மனிதப் புதைகுழியாக உள்ளது. அங்கு 155 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## படகை...

உயிரிழந்தார்.

அவரின் சடலம் நித்தியவெட்டை பிரதேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## முத்துஐயன்கட்டு...

இந்த வழக்கு விசாரணையில் பாதிக்கப்பட்ட தரப்பினரின் சார்பில், தான் முன்னிலையாகிறார் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் இறந்தவரின் குடும்பத்தாரிடம் தாமாகவே வாக்குறுதி அளித்திருந்தார்.

எனினும், நேற்றைய வழக்கில் சுமந்திரன் மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. அவரின் சார்பில் சட்டத்தரணி கெங்காதரன் முன்னிலையாகியிருந்தார்.

இந்த வழக்கில் நடைபெற்றது ஒரு கொலை என்பதைத் தவிர்த்து, காயம் விளைவித்தமை என்ற அடிப்படையில் ஒட்டுசுட்டான் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த விவகாரம் ஒரு கொலை வழக்காக விசாரிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருந்தும், பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இந்த வழக்கை கொலை வழக்காக விசாரிக்க வேண்டும் என்று நீதிமன்றில் போதிய கோரிக்கைகளை முன்வைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால், நேற்றைய வழக்கு விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர்களான இராணுவத்தினர் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

நேற்றைய வழக்கு மிக முக்கியமானதாக இருந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையாகவேண்டிய சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றுக்கு வருகை தரவில்லை என்று சில வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

மேலும், குறித்த வழக்கை கொலை வழக்காக பதிவு செய்திருந்தால், சந்தேக நபர்களுக்கான பிணையினை உடனடியாக நீதிமன்றத்தால் வழங்கக்கூடிய சாத்தியமில்லை என்றும், குறித்த பிணை வழங்கலை மேல் நீதிமன்றமே மேற்கொள்ளும் அதிகாரம்மிக்கது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாமாகவே முன்வந்து குறித்த வழக்கில் முன்னிலையான சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன், கொலை வழக்கை சாதாரண வழக்காக கையாண்டு, சந்தேக நபர்கள் இலகுவில் பிணையில் விடுவிக்கக் காரணமாக அமைந்துள்ளமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக சம்பந்தப்பட்ட தரப்புகள் தெரிவித்துள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# யாழ்ப்பாணத்துக்கான கடவுச்சீட்டு அலுவலகம் செப்ரெம்பர் 1 திறப்பு!

## ஜனாதிபதி அநுரகுமார பங்கேற்கிறார்

கொழும்பு, ஓக. 27

**யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி திறக்கப்படவுள்ளதாகப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் திறந்து வைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

70 மில்லியன் ரூபாய் செலவில் கடவுச்சீட்டு அலுவலகப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைய எதிர்வரும் முதலாம் திகதியின் பின்னர் வடக்கு மாகாணத்திலுள்ள மக்கள் தமக்கான கடவுச்சீட்டுக்களை யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும் புதிய அலுவலகத்தினூடாகப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் புதிய கடவுச்சீட்டு அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, ஒருநாள் மற்றும் சாதாரண சேவைகளூடாக புதிய அலுவலகத்தில் கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படும் எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டுக்கான அலுவலகம் விரைவில் திறக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்திருந்தார்.

இதன்படி, யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கடவுச்சீட்டு அலுவலகத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் முதலாம் திகதி திறந்து வைக்கவுள்ளார். (அ)

## கொழும்பில் குவிக்கப்பட்டுள்ள படையினர் சட்டத்தை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 27

கொழும்பில் எதிர்க்கட்சிகளால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் தயார் நிலையில் இருக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் அனைத்து பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் கடுமையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொது ஒழுங்கை பேணுவும், எந்தவித இடையூறுகளையும் தடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்படடுள்ளது.

ஏதேனும் வன்முறை சம்பவங்களையோ, சட்ட மீறல்களையோ எதிர்கொள்வதற்காக, உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க உயர் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அமைதியின்மை ஏற்படுமானால் உடனடி பதிலளிக்க, கலக தடுப்புப் படைகள் மற்றும் மேலதிக பொலிஸ் குழுக்கள் தயார் நிலையில் உள்ளதாக பாதுகாப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 9.99 பில்லியன் டொலர்களாக பதிவு

கொழும்பு, ஓக. 27

2025 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 9.99 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 7.79 வீத அதிகரிப்பாகும் என ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. (அ)

## கொழும்பில் இராஜதந்திர சமூகத்துடன் எதிர்க்கட்சிகள் ரணிலை ஆதரித்து பேச்சு

கொழும்பு, ஓக. 27

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கக் கைது செய்யப்பட்ட விடயம் தொடர்பாக கொழும்பில் உள்ள இராஜதந்திர சமூகத்தினருடன் எதிர்க்கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன ஆகியோர் அடங்கிய எதிர்க்கட்சிக் குழு இந்த முனைப்பில் ஈடுபட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் கைது குறித்து, ஏற்கனவே அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியாவின் இராஜதந்திர தரப்புக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அற்பமான குற்றச்சாட்டுகள் என்று கூறும் இந்த விடயம் தொடர்பில், ரணில் விக்கிரமசிங்க் கைது செய்யப்பட்டமை ஜனநாயகத்தின் மீது கடும் விளைவை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. (அ)

## அச்சுறுத்தல், அடக்குமுறை மூலம் எதிர்க்கட்சியை அழிக்க முயற்சி!

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 27

அச்சுறுத்தல்கள் மற்றும் அடக்குமுறைகள் மூலம் எதிர்க்கட்சியை அழிக்க ஏராளமான திட்டங்கள் நடந்து வருகின்றன. இந்த அச்சுறுத்தல்கள் அடக்குமுறைகள் பயமுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. எந்தவொரு சவாலையும் எதிர்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், ஜனநாயகத்தை இல்லாதொழிக்க எடுக்கும் சகல முயற்சிகளையும் முறியடிக்க மக்களுடன் ஒன்றிணைந்து வலுவான தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் பெற்றுத் தருவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்து நலம் விசாரித்த பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- குடிமக்களாக நமக்கு ஜனநாயக உரிமைகள், பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் அரசியலில் ஈடுபடும் சுதந்திரம் என்பன காணப்படுகின்றன.

இந்த அச்சுறுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்து உறுதியாக நின்று, நாட்டுக்காக நல்லதொரு நோக்கத்துக்காக அனைவரும் அணி திரளுமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த நோக்கத்திற்காக பெற்றுத் தரமுடியுமான உட்சபட்ச பாதுகாப்பையும் பக்க பலத்தையும் நாம் பெற்றுத் தருவோம். மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க எதிர்க்கட்சி பூரண ஆதரவைப் பெற்றுத் தரும்.

அவ்வாறே, அடக்குமுறை, அச்சுறுத்தல்களுக்கு எதிராகவும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும் நாம் அணிதிரள்வோம். இதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவோம். சட்டத்தை மதித்து, நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டை பாதுகாத்து, நீதிமன்ற சுதந்திரத்திற்காக நாம் முன்நிற்போம்-என்றார். (அ)

## புதிய பதிவாளர் நாயகமாக நேற்று கடமை ஏற்றார் சசிதேவி ஜலதீபன்



கொழும்பு, ஓக. 27

புதிதாக நியமிக்கப்பட்ட பதிவாளர் நாயகம் சசி தேவி ஜலதீபன் நேற்று அதிகார பூர்வமாகக் கடமை களைப் பொறுப்பேற்றார். 160 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட பதிவாளர் நாயகம் திணைக்களத்தில், இந்தப் பதவியை வகிக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

2003 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாகச் சேவையில் இணைந்த சசிதேவி ஜலதீபன், முன்னர் திருகோணமலை மற்றும் திம்புலாகல பிரதேச செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, பொருளாதாரக் கொள்கைகள் இராஜாங்க அமைச்சு மற்றும் நிதி, மூலதனச் சந்தைகள் மற்றும் நிறுவன சீர்திருத்தங்கள் இராஜாங்க அமைச்சு உள்ளிட்ட பல அமைச்சுக்களில் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பதவி வகித்துள்ளார்.

சமீபத்தில், அவர் திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளராகப் பணியாற்றினார்.

மேலும், அவரது புதிய நியமனத்திற்கு முன்னர் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் மேலதிக செயலாளராகக் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தவறான இடத்தில் கை வைத்தது அரசு அதன் விளைவு விரைவில் தெரியவரும்!

### கூறுகிறார் ஹிருணிக்கா பிரேமசந்திர

கொழும்பு, ஓக. 27

"பன்றிகளால் நரியை ஒருபோதும் கொல்ல முடியாது. எனவே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தவறான இடத்தில் கை வைத்துள்ளது. அதன் விளைவு தெரியவரும். ரணிலுக்காக எதிரணிகள் ஒன்றுபட வேண்டும்."

-இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திர அறைகூவல் விடுத்துள்ளார்.

அரகலய காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஹிருணிக்கா அரசியல் போரை முன்னெடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ரணிலுடன் தனக்கு அரசியல் ரீதியில் முரண்பாடுகள் இருந்தாலும் தற்போது அவருக்காக முன்னிலையாகின்றேன் எனவும் ஹிருணிக்கா நேற்று ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

"ரணில் விக்கிரமசிங்க உட்பட முன்னாள் ஜனாதிபதிகள் இந்நாட்டுக்கு ஆற்றிய சேவைகளுள் ஒரு சதவீதத்தையேனும் தேசிய மக்கள் சக்தி ஆற்றவில்லை.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் கைதானது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும். அதற்கு எதிராக நான் குரல் எழுப்புவேன். அதேபோல அரசியல் பேதங்களுக்கு அப்பால் எதிரணிகள் ஒன்றுபடவேண்டும்." -எனவும் ஹிருணிக்கா குறிப்பிட்டார். (அ)

# வடக்கு-கிழக்கு வீட்டுத் திட்டங்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு!

கொழும்பு, ஓக. 27

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றத் திட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டங்களை இந்த வருடத்தின் இறுதிக்குள் நிறைவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில், நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் தொடர்பான பூர்வாங்கக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின்போதே அதிகாரிகளால் வீட்டுத் திட்டச் செயன்முறை தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

அதற்கமைய, இந்தியா மற்றும் சீனாவின் கடன் உதவியின் கீழ் செயல்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது. அத்துடன், கழிவு முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய, நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் யாழ்ப்பாணம், கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பில் அதிகாரிகளால், ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த காலங்களில் கைவிடப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிப்பது மற்றும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களை விரைவில் நிறைவு செய்வது தொடர்பில் ஜனாதிபதியால் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org